நெஸ்லே லங்கா பீஎல்சீ செய்தி
வெளியீடு
கொழும்பு: மே 08, 2012

**நெஸ்லே நிறுவனம் இலங்கையில் சேகரிக்கும் பாலின் அளவை அதிகரித்துள்ளதுடன் உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற தனது அர்ப்பணிப்பை தொடர்ந்தும் உறுதியுடன் பேணிவருகின்றது**

இலங்கையில் தூய பாலைச் சேகரிப்பதில் தனியார்துறையைப் பொறுத்தவரையில் மிகப் பாரிய பங்குவகித்து வருகின்ற நெஸ்லே லங்கா நிறுவனம் 2012 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் உள்நாட்டில் சேகரித்துள்ள பாலின் அளவானது கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் சேகரிக்கப்பட்டிருந்த அளவுடன் ஒப்பிடுகையில் 45% இற்கும் மேலாக அதிகரித்துள்ளதென அறிவித்துள்ளது.

நாடெங்கிலும் உள்நாட்டு பாலுற்த்தித் தொழிற்துறையினரால் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் அளவு பாரிய அளவில் அதிகரித்துள்ள நிலையில் வழங்கலில் ஏற்பட்டுள்ள கணிசமான இந்த அதிகரிப்பை சமாளிக்கும் வகையில் 2012 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதகாலப்பகுதியில் தான் சேகரிக்கும் தூய பாலின் அளவை நெஸ்லே நிறுவனம் அதிகரித்துக்கொண்டுள்ளது.

*''நாம் அதிகரித்த அளவில் பாலைச் சேகரித்துவருவதன் காரணமாக குருணாகலில் எமது தொழிற்சாலையில் பதப்படுத்தி சேமிக்கக்கூடிய பாலின் அளவு தற்போது உச்ச மட்டத்தை எட்டியுள்ளது. எனினும் உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு உதவும் வகையில் எம்மால் இயன்றவரை அதிக அளவில் நாம் தொடர்ந்தும் அவர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்து வருகின்றோம் தூய பாலைச் சேகரித்து பதப்படுத்தும் எமது நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் உச்ச அளவில் மேற்கொண்டுவருகின்றோம்''* என்று நெஸ்லே லங்கா பீஎல்சீ நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. அலொய்ஸ் ஹொவ்பவர் அவர்கள் குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனம் தான் தொழிற்பட்டுவருகின்ற சமூகங்கள் மத்தியில் பரஸ்பர நன்மையை விளைவிப்பதில் உறுதியான ஈடுபாட்டுடன் 'பகிரப்பட்ட பெறுமதியைத் தோற்றுவித்தல்' என்ற கோட்பாட்டுடன் தொழிற்பட்டுவருகின்றது. நெஸ்லே மற்றும் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் 'பகிரப்பட்ட பெறுமதியைத் தோற்றுவிப்பதில்' முக்கிய தூண்களுள் ஒன்றாக கிராமியப் பொருளாதார அபிவிருத்தி இனங்காணப்பட்டுள்ளதுடன், இலங்கையில் பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதில் நிறுவனம் பாரிய பங்குவகித்து வந்துள்ளது.

இலங்கையில் பாலுற்பத்தித் தொழிற்துறையை வளர்ச்சியடையச் செய்யும்முகமாக வலிமையான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதில் நெஸ்லே நிறுவனம் அளப்பரிய பங்காற்றிவந்துள்ளது. 1980 களின் ஆரம்பம் தொட்டு இலங்கையில் பாலுற்பத்தித் தொழிற்துறைக்கு ஆதரவளிக்கும் பல்வேறு முயற்சிகளில் நிறுவனம் ஈடுபட்டுவந்துள்ளதுடன், கால்நடை தீவனம் மற்றும் இனப்பெருக்கம், கால்நடை சுகாதாரம் மற்றும் பண்ணை முகாமைத்துவம் போன்ற சிறந்த பாற்பண்ணை நடைமுறைகளை ஊக்குவிக்கும் முகமாக அரசாங்கம் மற்றும் பாற்பண்ணையாளர்களுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து செயற்பட்டுவந்துள்ளது. முக்கியமான உபகரணங்கள், மருந்துவகைகள் மற்றும் மானியங்களை வழங்குவதன் மூலம் நெஸ்லே நிறுவனம் பாற்பண்ணையாளர்களுக்கு மேலும் உதவிவருகின்றது.

உள்நாட்டில் தூய பாலைக் கொள்வனவு செய்வதற்கு உதவியாக நாடெங்கிலும் பாலைக் குளிரூட்டிப் பதப்படுத்தும் நிலையங்கள் மற்றும் பால் சேகரிப்பு நிலையங்கள் போன்ற முக்கியமான உட்கட்டமைப்புக்கள் மற்றும் வலையமைப்பையும் நிறுவனம் ஸ்தாபித்துள்ளது.

இதை விட *கிழக்கின் உதயம்* மற்றும் *வடக்கின் வசந்தம்* போன்ற அரசின் நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஒன்றியதாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் சாத்தியமான அளவில் அதிக அளவிலான தூய பாலைக் கொள்வனவு செய்வதற்கான விசேட ஏற்பாடுகளையும் நெஸ்லே லங்கா நிறுவனம் மேற்கொண்டிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மல்லாவி மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் திறந்துவைக்கப்பட்டிருந்த குளிரூட்டல் நிலையங்கள் 30 வருடங்களுக்குப் பின்னர் முதன்முதலாக அங்கு நிறுவப்பட்ட பதப்படுத்தல் நிலையங்களாகவும் அமையப்பெற்றிருந்தன.

நெஸ்லே நிறுவனம் உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதில் ஆற்றியுள்ள அளப்பரிய பங்களிப்புக்களை கௌரவிக்கும் வகையில் 2010 ஆம் ஆண்டின்

பிற்பகுதியில் சுயாதீன மக்கள் தொடர்பாட்டாளர்கள் அமைப்பின் சார்பில் பாராளுமன்ற சபாநாயகரான கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்கள் நிறுவனத்திற்கு சுவர்ண லங்கா விருதையும் வழங்கியிருந்தார்.

*''உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை நிலைபேற்றுடன் அபிவிருத்தி செய்வது எம்மைப் பொறுத்தவரையில் தொடர்ந்தும் முக்கிய இடத்தில் உள்ளது. பாலைக் கொள்வனவு செய்துள்ளதன் மூலமாக மட்டும் கடந்த ஆண்டில் ரூபா 2 பில்லியன் தொகை பங்களிப்பை நாம் கிராமியப் பொருளாதாரத்திற்கு வழங்கியுள்ளதுடன், அதனை 2012 ஆம் ஆண்டிலும் வழங்கும் வகையில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் தொழிற்படுவதற்கான உறுதியுடன் உள்ளோம்''* என்று திரு. ஹொவ்பவர் அவர்கள் குறிப்பிட்டார்.

\- முற்றும்-